செ.வெ.எண்.27 நாள்.12.01.2018.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத்திலிருந்து பிசான பருவ சாகுபடிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தண்ணீரினை திறந்து வைத்தார்.

--------

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத்திலிருந்து பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறப்பு நிகழ்ச்சி இன்று (12.01.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன், திருமதி.விஜிலா சத்தியானந்த் ஆகியோர் முன்னிலையில் தண்ணீரினை திறந்து வைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, நாங்குநேரி வட்டம், வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத்திலிருந்து பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத்தின் பாசன பரப்பு ஆயக்கட்டான மடத்துக்கால், நான்குநேரியன் கால்வாய் மற்றும் பச்சையாற்றின் குறுக்கே அமைந்துள்ள முதல் ஐந்து அணைக்கட்டுகள் ஆகியவற்றின் மூலம் பாசனம் பெறும் 9592.91 ஏக்கர் நிலங்களுக்கு இன்று முதல் 31.03.2018 முடிய, நாள் ஒன்றுக்கு வினாடிக்கு 100 கன அடிக்கு மிகாமல் 2017–2018ம் ஆண்டு பிசான சாகுபடிக்கு நீர் இருப்பினை பொறுத்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

வடக்குபச்சையாறு நீர்தேக்கத்தின் மூலம் பத்தை, மஞ்சுவிளை, களக்காடு, பத்மநேரி, வடமலைசமுத்திரம், சூரன்குடி, கடம்போடுவாழ்வு, நான்குநேரி, கரந்தாநேரி, மறுகால்குறிச்சி, பட்டர்புரம், இறைப்புவாரி, பரப்பாடி, விஜயநாராயணம் ஆகிய கிராமங்கள் பயன்பெறும் வகையில் நீர் திறக்கப்பட்டுள்ளது. நீர்தேக்கத்தில் எதிர்வரும் நாட்களில் பருவ மழை பொய்த்து எதிர்பார்க்கின்ற நீர்வரத்து கிடைக்கப் பெறவில்லையெனில் இருக்கும் நீரை அனுமதிக்கப்பட்ட பாசன நிலங்கள் முழுமைக்கும் பயன்பெறும் வகையில் சுழற்சி முறையில் வழங்கப்படும். எனவே, பொதுமக்கள், விவசாய பெருமக்கள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் விநியோகப் பணியில் பொதுப்பணித் துறையினருக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென பேசினார்.

இந்நிகழ்ச்சியில், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.எச்.வசந்தகுமார், பொதுப்பணித் துறை சிற்றாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் திரு.ஜெயபாலன், உதவி செயற்பொறியாளர் திரு.மதன சுதாகரன், உதவி பொறியாளர்கள் திரு.பாஸ்கர், திரு.மூர்த்தி, வேளாண்மை இணை இயக்குநர் திரு.பெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, நாங்குநேரி வட்டாட்சியர் திரு.ஆதிநாராயணன், மற்றும் அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.